செ.வெ.எண்:18 நாள்:08.11.2021

**மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் 127 பயனாளிகளுக்கு மின் இணைப்பு வழங்கபட்டதற்கான ஆணைகள் மற்றும் 3 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

**உலகமே போற்றும் வகையில் கொரோனா இல்லாத நிலையையும் / தேர்தல் நேரத்தில் அறிவித்த 500 வாக்குறுதிகளில் படிப்படியாக 200-க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் நிறைவேற்றி உள்ளார் என மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் பெருமிதம்**

**மறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1989-ல் விவாசயத்திற்கு இலவச மின்சாரத்தையும் மற்றும் 1996-ல் விவசாயிகளுக்கு 7000 கோடி விவசாய கடன்களை தள்ளுபடி செய்தார் என மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் தகவல்**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (08.11.2021) மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஒய்.பிரகாஷ் (ஓசூர்), திரு.டி.மதியழகன் (பர்கூர்), திரு.டி.ராமசந்திரன் (தளி) ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சார்பாக 2021-22 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் புதிய இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 127 பயனாளிகளுக்கு இலவச விவசாய மின் இணைப்பு ஆணைகள் மற்றும் 3 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தொடர்ந்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

**மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் தெரிவித்ததாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களை தேடி மருத்துவம், டாக்டர் கலைஞரின் வருமுன் காப்போம், இல்லம் தேடி கல்வி திட்டம் போன்ற திட்டங்களை நிறைவேற்றியுள்ளார். மக்களை தேடி மருத்துவ திட்டத்தின் கீழ் 34 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு அரசு எரிசக்தி துறை மானிய கோரிக்கை எண்.14-ன் படி 2021-22 ஆம் வருடத்திற்கு ஒரு இலட்சம் புதிய இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி, ஓசூர் மற்றும் போச்சம்பள்ளி ஆகிய கோட்டங்களில் சாதாரண வரிசை திட்டத்தில் 01.04.2004 முதல் 31.03.2006 வரை விண்ணப்பம் பதிவு செய்துள்ள 2,619 நபர்களுக்கும், ரூ.25,000/- சுயநிதி திட்டத்தில் 31.03.2012 வரை முன் தொகை செலுத்தியுள்ள 3,265 நபர்களுக்கும், ரூ.50,000/- சுயநிதி திட்டத்தில் 31.03.2012 வரை முன் தொகை செலுத்தியுள்ள 575 நபர்களுக்கும், ரூ.10,000/- சுயநிதி திட்டத்தில் 01.04.2006 முதல் 31.03.2007 வரை விண்ணப்பம் பதிவு செய்துள்ள 62 நபர்களுக்கும், தட்கல் சுயநிதி திட்டத்தில் 1,789 நபர்களுக்கும், ஏனைய அரசு திட்டங்களில் 76 நபர்களுக்கும் ஆக மொத்தம் 8,386 நபர்களுக்கு நடப்பாண்டில் மின் இணைப்பு வழங்க ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

இத்திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களினால் சென்னையில் 23.09.2021 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குட்பட்ட 40 பயனாளிகளுக்கு மின் இணைப்பு வழங்கபட்டதற்கான ஆணைகள் வழங்கப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்), பசுமை வீடுகள் திட்டம், பசுமை வீடுகள் திட்டம் (மலைவாழ் மக்கள் பசுமை வீடுகள்) திட்டம், நீலப் புரட்சி (மீனவர் குடியிருப்புத் திட்டம்) திட்டம், ஜல் ஜீவன் திட்டம், 15-வது நிதிக்குழு மானியம் (கிராம ஊராட்சி, வட்டார வளர்ச்சி, மாவட்ட ஊராட்சி, கனிமம் மற்றும் சுரங்கத்துறை) திட்டம், தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) தனி நபர் இல்லக்கழிவறை, சமுதாய சுகாதார வளாகம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் முன்னுரிமை பணிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் தொழிலாளர் சார்ந்த பணிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் நீர் பாதுகாப்புப் பணிகள் - சிறப்பு இயக்கம் குறித்தும்,

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை சார்பாக பிரதம மந்திரி கிராம சாலை திட்டம், தமிழ்நாடு ஊரக கிராம திட்டம், ஒருங்கிணைந்த நிதி வருவாய் திட்டம், மாநில நிதி குழு மானியம், பழங்குடியினர் மேம்பாட்டு இணைப்பு சாலை திட்டம், சமூக பொருளாதார மேம்பாட்டு திட்டம் குறித்தும், ஓசூர் மாநகராட்சி திடக்கழிவு மேலாணண்மை, நகர்ப்புற

மேம்பாட்டு திட்டம் பணிகள் குறித்தும், கிருஷ்ணகிரி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம், பேரூராட்சிகள் துறை சார்பாக திடக்கழிவு மேலாண்மை, ஒருங்கிணைந்த நகர்ப்புற மேலாண்மை திட்டம், சிறப்பு சாலை திட்டம், வருவாய் துறை சார்பாக இணையவழி பட்டா மாற்றம் பணிகளும்,

பொதுப்பணித்துறை (கட்டுமானம்) சார்பாக பல்வேறு கட்டுமான பணிகள், பொதுப்பணித்துறை (மருத்துவப்பணிகள்) அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுமான பணிகள், நீர்வள ஆதாரத்துறை சார்பாக தென்பெண்ணையாற்றின் குறுக்கே படுக்கை அணை அமைக்கும் பணிகள், எண்ணேகொள் அணைக்கட்டின் வலது மற்றும் இடது புற கால்வாய்கள் அமைக்கும் பணிகள் குறித்தும், வாய்க்கால்கள் புனரமைக்கும் பணிகள் குறித்தும், வனத்துறை சார்பாக தனியார் நிலங்களில் மரக்கன்றுகள் நடுதல், வன எல்லைகளில் வன விலங்குகள் ஊருக்குள் புகாத வண்ணம் கம்பி கயிறு அமைக்கும் பணிகள், வன விலங்குகளுக்கு குடிநீர் தொட்டிகள் அமைக்கும் பணிகள், நெடுஞ்சாலைத்துறை சார்பாக சாலை திட்ட பணிகள், தாட்கோ துறை சார்பாக தொழில் முனைவோர் திட்டம், தொழிற் பயிற்சி மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோர் திட்டம் குறித்தும்,

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பாக குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் திட்ட பணிகள், சுகாதார துறை சார்பாக டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி திட்டம், ஜே.எஸ்.ஒய் (JSY) திட்டம், சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை சார்பில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கட்டுமானப் பணிகள், மாவட்ட தொழில் மையம் சார்பாக புதிய தொழில் முனைவோர் திட்டம், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டப் பணிகள், தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பாக உயர் அழுத்த இணைப்புகள், வீட்டு உபயோக இணைப்புகள், தெரு விளக்கு குடியிருப்பு இணைப்புகள், விவசாய இணைப்புகள், சிறுதொழில் இணைப்புகள் குறித்த பணிகளும்,

கூட்டுறவு துறை சார்பாக பயிர் கடன் வழங்கும் திட்டம், மீன் வளத்துறை சார்பாக தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பாசன குளங்களில் மிதவை கூடுகள் அமைத்தல், மீன் குஞ்சுகள் வளர்ப்பு பண்ணைகள் அமைத்தல், மீன் வளர்ப்பினை விரிவுபடுத்திட மானியம் வழங்குதல் திட்டப் பணிகளும்,

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் சார்பில் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டப் பணிகளும், மாவட்ட ஆதி திராவிடர் மற்றும்

பழங்குடியினர் சார்பாக பெண் கல்வி ஊக்குவிப்பு திட்டம், பெண் குழந்தைகளுக்கான 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம், உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை, மாணவ மாணவிகளுக்கு சிறப்பு கட்டணம் வழங்கும் திட்டம், இலவச மிதிவண்டிகள், தையல் இயந்திரங்கள், சலவைப்பெட்டி வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இத்திட்டத்தின் கீழ் செயல்படும் பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் அனைத்து துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.செ.ராஜேஸ்வரி, தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்பார்வை பொறியாளர் திருமதி.ஏ.ஏஞ்சலா சகாயமேரி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கோ.மலர்விழி, மாவட்ட வன அலுவலர் செல்வி.க.கார்த்திகேயணி இவப., கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.மு.விவேகானந்தர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.சுகவனம், திரு.வெற்றிசெல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.செங்குட்டுவன், திரு.முருகன், திரு.சத்யா மற்றும் அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**